## IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL

## C.C.No.1 /2017

## Deposition of PW.1

**Name** : **Pushparaj**

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Dated** : **16.10.2019**

**Solemnly affirmed by Thiru.S.Selvaraj**

**In accordance of the provision of Act 1873.**

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்பொழுது நாகர்கோவில் மரமண்டியில் வனவராக பணியில் இருக்கிறேன். நான் வேளிமலை வனசரகத்தில் தெற்கு பீட்டில் வனகாப்பாளராக பணிபுரிந்த சமயத்தில், கடந்த 05.03.2001 காலை 5.00 மணியளவில் நானும், வனவர் முருகன், வனவர் சந்திரசேகரன் நாயர் ஆகிய மூவரும் வேளிமலை தெற்கு பீட், வேளிமலை பாதுகாப்புகாட்டில் வாழைக்குழி சராகத்தில் தணிக்கை செய்தோம். அப்பொழுது சஜேந்திரன், லோகிதாஸ், சக்கிலியாஸ், ஜெகன் மற்றும் பஞ்சு ஆகிய 5 எதிரிகளும், அங்கிருந்த பச்சை தேக்குமரங்களை வாளால் அறுத்து, 5 துண்டுகளாக்கி, ஆளுக்கொரு துண்டு சுமந்து கொண்டு வரும்போது, எங்களை பார்த்து துண்டுகளை போட்டுவிட்டு ஓடினர். அப்போது ஆஜர் எதிரி சஜேந்திரன் ஓடும்பொழுது செடி ஒன்று தடுக்கி விழுந்துவிட்டார். அவரை நாங்கள் பிடித்துவிட்டோம். சம்பவயிடத்தில் வைத்து நான் ஸ்தல மகஜர் தயார் செய்தேன். ஆஜர் எதிரி கொடுத்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். ஸ்தல மகஜர் அ.சா.ஆ.1 மற்றும் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கெச் நமூனா தயார் செய்தேன், அது அ.சா.ஆ.3, நான்

வனகுற்றஅறிக்கை தயார் செய்தேன். பதிவு செய்த வழக்கு ஆவணங்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட 5 தேக்குமரதுண்டுகளை வனசரக அலுவலகம் கொண்டு சென்று வனசரக அலுவலரிடம் ஆஜர் செய்தேன்.

(வழக்கு சொத்துக்களை குறியீடு செய்வதற்காக புகார்தாரர்தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)